THE HON. THIRU C. N. ANNADURAI : That is exactly what I wanted my hon. Friend to avoid. Let him not say the police detective dogs ' but say ' the dective dogs in the Police department '.

THIRU K. VINAYAKAM : The Hon. Chief Minister is well aware of the construction of sentences. It also means the same thing. It does not mean anything else.

Sir, may I know whether in the matter of procreation of these specialised types of dogs, the Police department are adopting family planning methods so far as these dogs are concerned?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I am sorry to learn that my hon. Friend is interested in family planning for dogs. But anyhow these detective dogs are not born but they are trained.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு தானியங்கள் கிடைக்காமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் ஆறு வந்ததில் 68-வது விதிப்படி நான்கு தீர்மானங்கள் பேரவைத் தலைமை அலுவலகத்திலேயே தள்ளப்பட்டுவிட்டன. இரண்டு தீர்மானங்கள் பேரவையில் குறிப்பிட அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றி அறிவிக்கை கொடுத்திருக்கும் உறுப்பினர்கள் இருவரும் அந்தத் தீர்மானங்கள் எப்படி விதிகளுக்கு உட்பட்டவையாக இருக்கின்றன என்பதைப்பற்றி மட்டும் விளக்க வேண்டும். முதலில் திரு. சுப்பராஜா அவர்கள், அவருடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பேரவை முன் படிப்பார்கள்.

THIRU A. A. SUBBA RAJA : Mr. Speaker, I have given notice of the following adjournment motion—

" I request that the business of the House be adjourned to discuss a definite matter of public importance, namely—

' Non-availability of foodgrains in Ramanathapuram district during off-season and the need to supply foodgrains to the villagers of the district at subsidised rates '."

இராமநாதபுர மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் குறுகிய காலத்தில் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மூன்று மாதங்களில் தானியம் கிடைக்காமல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அரசாங்கம் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டுமென்ப

தைப்பற்றி எடுத்துக் கூறுவதற்காகச் சபையை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சனையைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணவுப் பற்றுக்குறை என்பது போன்ற கேள்விகள் எல்லாம், அரசினரின் சாதாரண நிர்வாகத் திற்கு உட்பட்டவை. அதன் காரணமாக இது போன்றவை, ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு ஏற்றவையல்ல என்று பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பேரவை நடவடிக்கைப் பதிவேடு 1959-ஆம் ஆண்டு 23-வது புத்தகம் 29-30-ஆம் பக்கங் களிலும், இன்னும் பற்பல நாட்களிலும் இதுபோன்ற தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உணவுப் பற்றுக்குறை அல்லது உணவுப் பொருள்கள் விலையேற்றம் என்பதுபற்றியெல்லாம் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதன்படி இதற்கும் அனுமதி மறுக்கிறேன்.

அடுத்து, நெல்லிக்குப்பம் தொகுதி உறுப்பினர் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஆட்சேபத்திற்குரிய சில சொற்களை நீக்கிவிட்டு, திருத்தியபடி, இங்கு கூறுவதற்கு அனுமதிக்கிறேன்.

(ii) வடலூர், நெய்வேலி சிராமிக் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம்

THIRU C. GOVINDARAJAN : Sir, I have given notice of the following adjournment motion—

"I request that the business of the House be adjourned to discuss a definite matter of urgent public importance, namely :—

'Strike in the Neyveli Ceramic Factory at Vadaloor, South Arcot district consequent on the refusal of the management to pay Deepavali bonus and to grant other demands of the labourers'."

சட்டமன்றத் தலைவர் அவர்களே, சேஷசாயி குரூப்பைச் சேர்ந்த வடலூரிலுள்ள கிராமத் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்களும் சிப்பந்திகளும் 300-க்கு மேற்பட்டவர்கள் போனஸ் கோரிக்கையை தொழிற்சாலை நிர்வாகிகள் முன்வைத்தனர். நிர்வாகிகள் கோரிக்கைகளை மறுக்கவே சட்டப்பூர்வமாக வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்து 18-10-1967 முதல் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். பேச்சுவார்த்தை நடத்துவதற்குகூட யாரும் ஸ்தலத்தில் இல்லாமல் தொழிற்சாலை நிர்வாகிகள் அனைவரும் வெளியூர்களுக்குச் சென்றுவிட்டனர். இதில் குறிப்பிடத் தக்கது, என்னவென்றால் புதிதாகப் போடப்பட்டி ருக்கும் போனஸ் கோரிக்கை மட்டுமல்ல அந்தத் தொழிலாளர்கள் 1½ மாதங்கள் வேலை செய்ததற்கான சம்பளம் இரண்டு லட்சம் ரூபாய் வருகிறது. அந்தச் சம்பளத்தைக்கூடக் கொடுக்காமல் இருப்பதால் அத்தனை தொழிலாளர்களுடைய குடும்பங்களும் கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கின்றன. இன்றுடன் அங்கு நடக்கும் ஸ்ட்ரைக் 41-வது நாளாகும். தென்னாற்காடு